Embassy of the United States of America
Colombo

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 ● Fax: +94 (1) 244-9070
Email: ShenJY@state.gov ● http://lk.usembassy.gov/

Release No. 20170712

## அமெரிக்கப் புத்தாக்க நிபுணர்கள் இலங்கைத் தகவல் தொழில்நுட்பத் தொழில் முயற்சியாளர்களுடன் ஒத்துழைத்தல்

**கொழும்பு, ஜூலை 12 :** ஐக்கிய அமெரிக்க - இலங்கைப் பொருளாதார உறவுகளையும் வளங்களையும் முன்னெடுக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் அண்மையில் இலங்கையின் முன்னணி தகவல் தொழில்நுட்பத் தொழில் முயற்சியாளர்களுடனும், பொறியியல்துறை மாணவர்களுடனும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையப் பிரதிநிதிகளுடனும் (ICTA) பணியாற்றுவதற்கு அமெரிக்கப் புத்தாக்க நிபுணர் செரின் எடிசனை ஆதரித்தது. எடிசன் இந்த ஆண்டின் ஆசிய மாநாட்டிற்கான பிரதான தலைமைப் பேச்சாளராகவும் இருந்தார்.

‘‘இலங்கையானது அதன் மூலோபாய இடம் மற்றும் ஈர்க்கக்கூடிய மனித மூலதனத்துடன் நவீன தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார மையத்துடன் வெற்றிகரமாக நிலைநிறுத்தும் ஒரு மையப்பகுதியாக விளங்கும்’’ என்று ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தலைமைத் தூதுவர் திரு. ரொபேர்ட் ஹில்டன் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறுகையில், ‘‘பொருளாதாரரீதியாகத் மிகவும் துடிப்பான இலங்கையின் பார்வையை விஸ்தரிப்பதற்காக அமெரிக்க வல்லுநர்களை அழைத்து வருவதில் நாம் பெருமிதம் அடைகின்றோம்’’ என்றும் கூறினார்.

எடிசனின் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிற்கான எட்டு நாள் விஜயத்தின்போது, அவர் தொழில் முனைவோர்களைச் சந்தித்ததுடன், வணிக இலக்குகளை அடைவதற்கான தந்திரோபாயங்களையும் மற்றும் உலகளாவியரீதியிலும் பிராந்தியரீதியிலும் இலங்கை உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குமான உபாயங்களையும் வழங்கினார். வோல்வோ, வார்னர் பிரதர்ஸ், கோர்ஃபோர் மற்றும் ரெவ்லோன் உள்ளிட்ட வாடிக்கையாளர்களிற்காக உலகம் முழுவதும் வெற்றிகரமாக நிறுவனங்களை ஆரம்பித்த எடிசன் சான்பிரான்ஸிஸ்கோவின் தென் பகுதியின் ஒரு சிலிக்கன் பள்ளத்தாக்குத் தொடரின் (Silicon Valley) உலகளாவிய பொருளாதார மேம்பாட்டு நிபுணர் ஆவார்.

யாழ்ப்பாணத்தில் ஆர்வம் மிக்க தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதில் செரின் உதவியதுடன், நாம் எமது சொந்த உருவாக்க இடங்களை மேம்படுத்துவதற்காக சிலிக்கன் பள்ளத்தாக்கு தொடர் நிபுணத்துவத்தையும் எமக்கு வழங்கினார் என யாழ். தகவல் தொழில்நுட்ப சமூக மையத்தின் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

எடிசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சியிலுள்ள பொறியியல் பீடத்தின் வர்த்தக மற்றும் பொறியியல் மாணவர்களிற்கும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழக மாணவர்களிற்கும் கருத்தரங்குகளை நடத்தினார். அத்துடன் அவர் பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின பிரதிநிகள் மற்றும் இலங்கை மென்பொருள் கழகம் சேவை நிறுவனங்களுக்கும் (SLASSCOM) அறிவுரை வழங்குவதில் தனது நேரத்தைச் செலவிட்டார். ஆசிய மாநாட்டில் எடிசன் உள்நாட்டு வர்த்தகங்களையும் மற்றும் தமது தமது சந்தை வளங்களை விரிவுபடுத்துவதற்கு உலகளாவிய சிறந்த நடைமுறைகளில் ஆரம்பிக்கும் தகவல் தொழில்நுட்பத்தினையும் ஊக்குவித்தார்.

எடிசன் கொழும்பு, கண்டி ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட உருவாக்குநர்களிற்கான இடம் (Makerspaces) என்ற புத்தாக்க சிந்தனையின் ஆரம்பத்திற்கு ஆதரவளிக்கும் முகமாக கடந்த வருடம் 2016 ஒக்ரோபரில் இலங்கைக்கான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார். அவர் ICTA இன் தொழில்நுட்ப ஆரம்ப நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பங்குபற்றுநருக்கு இலவச மெய்நிகர் வகுப்புக்களையும் தனிப்படட உளவளத்துணைசார் ஆலோசனைகளையும் வழங்கினார்.

# # #